Education
Centre for Education Statistics & Evaluation

Tamil

# *Tell Them From Me* parent survey

# *என் கருத்தை அவர்களுக்குச் சொல்லுங்கள்* எனும் பெற்றோர் கருத்தாய்வு

# Frequently Asked Questions (parents and carers)

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள்)

## கல்விப் புள்ளியியல் மற்றும் மதிப்பீட்டு மையம் (CESE)

### 1. "கற்றலில் பங்குதாரர்கள்" (Partners in Learning) எனும் பெற்றோர் கருத்தாய்வு என்றால் என்ன?

"கற்றலில் பங்குதாரர்கள்" (Partners in Learning) என்ற பெற்றோர் கருத்தாய்வு என்பது மாணவர் ஈடுபாடு என்பது பற்றிய *"என் கருத்தை அவர்களுக்குச் சொல்லுங்கள்" (Tell Them From Me)* எனும் கருத்தாய்வுத் தொகுதிகளில் ஒரு பகுதியாகும். பெற்றோருக்கும் பள்ளிக்கும் இடையேயான முக்கிய உறவை தெளிவுபடுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும் பெற்றோர் கருத்தாய்வு உதவுகிறது.

பள்ளி மற்றும் அமைப்புமுறை அளவிலான பெற்றோரின் கண்ணோட்டத்தில் எழும் புரிதல்களை அளந்து, மதிப்பீடு செய்து, அறிக்கையளிக்கும் வகையில் இந்தக் கருத்தாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நியூ சவுத் வேல்ஸ் கருத்தாய்வானது மாணவர்களின் நல்வாழ்வு, ஈடுபாடு மற்றும் திறமையாகக் கற்பிக்கும் நடைமுறைகள் போன்றவற்றில் கவனம் செலுத்துகிறது.

### 2. இந்தக் கருத்தாய்வு என்ன வகையிலான கேள்விகளைக் கேட்கும்?

கற்பித்தல், தகவல் தொடர்பு மற்றும் கற்றலில், நடத்தையில் பள்ளியின் ஆதரவு உள்ளிட்ட தங்கள் குழந்தையின் பள்ளி அனுபவம் பற்றிய பெற்றோர்களின் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்வதே இந்தக் கருத்தாய்வுக் கேள்விகளின் நோக்கமாகும். தங்களுடைய குழந்தையின் கற்றல் தொடர்பாக வீட்டிலுள்ள செயல்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றிய பெற்றோர்களின் கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்வதும் இந்தக் கருத்தாய்வுக்குப்பின் நோக்கமாகும்.

இந்தக் கருத்தாய்வு பெற்றோர்களிடம் பின்வருபவை தொடர்பான கேள்விகளைத் தொடுக்கும்:

| | | |
|---|---|---|
| பெற்றோர்களுக்குத் தாங்கள் வரவேற்கப்படுகிறோம் என்ற உணர்வு | பெற்றோர்களுக்குத் தகவல்கள் தெரிவிக்கப்படுதல் | வீட்டில் படிப்பதற்குப் பெற்றோர்களின் ஆதரவு |
| நேர்மறையான நடத்தைக்குப் பள்ளியின் ஆதரவு | பாதுகாப்பு | உள்ளடக்கம் |
| கருத்துப் பரிமாற்றத்துக்கு முன்னுரிமைகள் | பள்ளியில் பெற்றோர்களின் பங்களிப்பு | கற்றலுக்குப் பள்ளியின் ஆதரவு |

### 3. இந்தக் கருத்தாய்வில் பங்கேற்பதற்குப் பள்ளிகள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றன?

எந்தவித கட்டணமுமின்றி அனைத்து நியூ சவுத் வேல்ஸ் அரசுப் பள்ளிகளும் பங்கேற்கலாம். உங்கள் பள்ளி பங்கேற்க முடிவு செய்துள்ளது.

### 4. இந்தக் கருத்தாய்வில் பங்கேற்பதன் மூலம் என் குழந்தையின் பள்ளிக்கு என்ன பயன்?

பெற்றோர் கருத்தாய்வானது, பள்ளி முதல்வர்கள் மற்றும் பள்ளித் தலைவர்களுக்கு அவர்களின் பள்ளியைப் பற்றிய மற்றும் வீட்டில் கற்றலைப் பற்றிய பெற்றோர்களின் கண்ணோட்டத்தை வழங்குகிறது. பெற்றோர்கள் மற்றும் ஊழியர்களுக்கிடையேயான கருத்துப் பரிமாற்றம், வீட்டிலுள்ள செயல்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள், அத்துடன் கற்றல் மற்றும் நடத்தைக்குப் பள்ளியின் ஆதரவு பற்றிய பெற்றோரின் கண்ணோட்டம் போன்றவற்றைத் துல்லியமாக, சரியான நேரத்தில் நடைமுறைக்கேற்ற மேம்பாடுகளை பள்ளிகள் பயன்படுத்துவதை உருவாக்க உதவுகிறது.

கருத்தாய்வுப் பதில்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் பள்ளித் தலைவர்களுக்காக உடனடியாக அறிக்கைகளாகத் தொகுக்கப்படுகின்றன. உருவாகும் சிக்கல்களைக் கண்டறிவதற்கும், பள்ளியின் மேம்பாட்டுக்குத் திட்டமிடுவதற்கும், பள்ளி முதல்வர்கள் அதன்பின் இந்தத் தகவல்களைப் பயன்படுத்திக் கொள்ள அவர்களுக்கு இது உதவிகரமாக இருக்கும்.

### 5. பெற்றோர் கருத்தாய்வு மாணவர் கருத்தாய்வுடன் எவ்வாறு தொடர்புடையது?

பெற்றோர் கருத்தாய்வானது உங்கள் குழந்தையைப் பூர்த்தி செய்யும்படி கேட்கப்படும் "என் கருத்தை அவர்களுக்குச் சொல்லுங்கள்" *Tell Them From Me* எனும் மாணவர் கருத்தாய்வுடன் இணைந்து அதை முழுமையாக்குகிறது. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கண்ணோட்டத்தைப் பள்ளிகள் புரிந்து கொண்டுள்ளனவா என்பதை உறுதி செய்துகொள்ள இந்தக் கருத்தாய்வுகள் (ஆசிரியர் கருத்தாய்வுடன் சேர்த்து) வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு கருத்தாய்வைப் பற்றிய மேலதிக விவரங்களுக்குக் கருத்தாய்வு இணையதளத்தைப் பார்க்கவும்: http://surveys.cese.nsw.gov.au/

### 6. இந்தக் கருத்தாய்வில் பங்கேற்க நான் என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கருத்தாய்வைச் செய்வதற்குப் பொதுவாக 15 நிமிடங்கள் எடுக்கும். மேலும் இது முழுவதும் இணையவழியாக *The Learning Bar.* என்ற கருத்தாய்வு இணைய உருவாக்குநர்களால், பாதுகாப்பான இணையதளத்தின் மூலம் நடத்தப்படுகிறது. நீங்கள் இந்தக் கருத்தாய்வுகளை மேசைக் கணினிகள், மடிக்கணினிகள், ஐ-பேடுகள், வரைப்பட்டிகைகள் (tablets) மற்றும் ஸ்மார்ட்ஃபோன்கள் வழியாகச் செய்து முடிக்கலாம். வீட்டில் கருத்தாய்வைச் செய்துமுடிக்க உங்களுக்கு ஒரு இணைப்பு வழங்கப்படும், அல்லது உங்கள் பள்ளி உங்களுக்குக் கணினிகளை வழங்கலாம் அதன்மூலம் பள்ளி நடக்கும் நேரங்களில் நீங்கள் கருத்தாய்வை முடிக்கமுடியும். இந்த இணைப்பு உங்கள் பள்ளி மூலம் 3-ஆம் பருவத்தில் உங்களுக்கு வழங்கப்படும்.

## 7. நான் பங்கேற்க வேண்டுமா?

இல்லை. கருத்தாய்வில் பங்கேற்பது என்பது உங்கள் விருப்பத்துக்குட்பட்டது. உங்கள் பதில்களைப் பாராட்டும் அதே நேரத்தில், கருத்தாய்வில் இருக்கும்போது, உங்களுக்குச் சங்கடமாக இருப்பதாக உணர்ந்தால், எந்த நேரத்திலும் நீங்கள் கருத்தாய்வை நிறுத்திவிட முடியும். கருத்தாய்வில் உள்ள பெரும்பாலான கேள்விகளைத் தவிர்த்து விடலாம்.

## 8. என் பதில்களிலிருந்து என்னையோ அல்லது என் குழந்தையையோ பள்ளி அடையாளம் காண முடியுமா?

பெற்றோரின் பதில்களிலிருந்து தனிப்பட்ட பெற்றோர்களை அல்லது மாணவர்களைப் பள்ளிகளின் ஊழியர்கள் அடையாளம் காண முடியாது. ஐந்து பதில்களுக்குக் குறைவாக உள்ள பள்ளி அறிக்கைக் கருவிகளுக்குத் ‘தரவு அடக்கல் விதிகள்’ (data suppression rules) பயன்படுத்தப்படுகின்றன.

## 9. கருத்தாய்வுத் தரவுகளில் எந்தவிதமான பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும்?

கருத்தாய்வுகள் முடிந்தவுடன், அறிக்கைகள் தயாரிக்கப்படும். அத்துடன் அவை பெரும்பாலும் மூன்று வேலைநாட்களுக்குள் பள்ளிகளுக்குக் கிடைக்கும். பள்ளித் தலைவர்கள் தங்களுடைய பள்ளியில் பெற்றோர்களின் அனுபவங்களையும், கண்ணோட்டத்தையும் நன்கு புரிந்துகொள்ள இந்தத் தரவுகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களமானது, கல்விப் புள்ளியியல் மற்றும் மதிப்பீடு மையத்தின் (Centre for Education Statistics and Evaluation (CESE)), மூலம் திணைக்களம் வைத்திருக்கும் செயல்திறன் தரவுகள் உள்ளிட்ட தற்போதைய மாணவர் தரவுகளுடன் இணைந்து, இந்தக் கருத்தாய்வுத் தரவுகளின் பகுப்பாய்வை மாநிலம் முழுதும் மேற்கொள்ளும். பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் ஈடுபாடு, மாணவர்களின் நல்வாழ்வு, திறமையான கல்வி மற்றும் மாணவர் படிப்பு இவற்றுக்கு இடையிலான உறவுகளை அனைத்துப் பள்ளிகளும் நன்கு புரிந்து கொள்ள இதன் முடிவுகள் உதவுகின்றன.

மாணவர் பெறும் பலன்களை மேம்படுத்த என்ன மாதிரியான பணிகள் செய்வது என்பதை விவாதிக்க இந்தத் தரவுகளைப் பற்றிய CESE -இன் பகுப்பாய்வு முடிவுகள் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி முதல்வர்களுக்கு உதவிபுரியும். தரமான கல்வி மற்றும் தலைமைப் பண்பு போன்றவற்றில் திணைக்களத்தின் தொடர்ந்த கவனத்துக்கு இது உதவுகிறது. மாணவர் ஈடுபாடு மற்றும் நல்வாழ்வு இவற்றின் தன்மைகளை எதிர்வரும் காலங்களில் நாம் நன்கு புரிந்துகொள்ள உதவும் வகையில் இந்தத் தரவுகள் வருங்கால ஆய்வுக்காகப் பாதுகாக்கப்படும்.

## 10. “கற்றலில் பங்குதாரர்கள்” கருத்தாய்வு எப்போது நடக்கும்?

இந்தக் கருத்தாய்வுகள் அனைத்து பங்கெடுக்கும் பள்ளிகளிலும் 3-ஆம் பருவ மத்தியிலிருந்து 4-ஆம் பருவ முதல் சில வாரங்கள் வரையிலான காலப்பகுதியில் நடத்தப்படும். பொதுவாக 3-ஆம் பருவத்தின் ஆறாவது வாரம் முதல் 4-ஆம் பருவத்தின் இரண்டாவது வாரம் வரை.

## CESE என்றால் என்ன?

கல்விப் புள்ளியியல் மற்றும் மதிப்பீட்டு மையம் (CESE) என்பது கல்வித் திணைக்களத்தின் ஓர் அங்கமாகும்.

நியூ சவுத் வேல்ஸில் கல்வியின் செயல்திறன், ஆற்றல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றை மேம்படுத்த CESE உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து கல்வி வழியாகக் கற்பித்தலையும், கற்றலையும் மேம்படுத்தக்கூடிய புதிய வாய்ப்புகளை உருவாக்குவது எந்தப் பணிகள் என்பதை CESE அடையாளம் கண்டு, பகிர்ந்து கொள்ளும்.

**CESE பற்றிய கூடுதல் தகவல்கள் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும்: www.cese.nsw.gov.au**

## *The Learning Bar* என்றால் என்ன?

*The Learning Bar* என்பது ஆரம்பப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான பள்ளிக் கருத்தாய்வில் சிறப்பு பெற்ற கனடா நாட்டு கல்வி நிறுவனமாகும். அதன் கருத்தாய்வான *Tell Them From Me*, என்பது கனடாவில் தேசிய அளவில் நடத்தப்பட்ட மிகப்பெரிய பள்ளிக் கருத்தாய்வாகும். அது கனடாவிலுள்ள பத்து மாகாணங்களில் ஒன்பதில் பயன்படுத்தப்பட்டது. 6,300-க்கும் அதிகமான பள்ளிகள் மற்றும் 5.4 மில்லியன் மாணவர்கள் இந்தக் கருத்தாய்வில் பங்கெடுத்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியப் பள்ளிகள் *Tell Them From Me* எனும் கருத்தாய்வில் 2012-ஆம் ஆண்டிலிருந்து பங்கெடுத்துக்கொண்டு வருகின்றன.

Dr J Douglas Willms அவர்களின் தலைமையில் *The Learning Bar* வழி நடத்தப்பட்டது. Dr Willms சர்வதேச கல்வி அகாடமியின் தலைவர், அமெரிக்க தேசிய கல்வி அகாடமியின் உறுப்பினர் மற்றும் கனடா நாட்டின் ராயல் சொசைட்டியின் அங்கத்தினர் ஆவார். அவர் அண்மையில் முதலாம் அடுக்கு கனடா எழுத்தறிவு மற்றும் மனித அபிவிருத்தி ஆராய்ச்சி மையத் தலைமைப் பொறுப்பினை 14 ஆண்டுகளாக வகித்துவந்தார். OECD -இன் சர்வதேச மாணவர் மதிப்பீட்டுத் திட்டத்துக்காக (Programme for International Student Assessment – PISA) கேள்விகளைத் தயார் செய்வதில் Dr Willms முக்கிய பங்கு வகித்திருக்கிறார்.

***The Learning Bar* பற்றிய மேலதிக விவரங்கள் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும்: www.thelearningbar.com**

பெற்ளே ர் கருத்தாய் வு பற்ள ய கேள்வி கள் ஏதாவது உங்களுக் கு இருநளதால், CESE -ஐ நீங்கள் தொடர்பு கொள்ள மி ன்ளன்ஞ்சல்: TTFM@det.nsw.edu.au அல்லது தொலைபேசி எண்: **1300 131 499.**